# தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்

**வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்துப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சு**

## வெற்றிடங்கள்

1997 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள வாகன ஒழுங்குறுத்துகை, பேருந்துப் போக்குவரத்துச் சேவைகள் மற்றும் புகையிரதப் பெட்டிகள் மற்றும் மோட்டார் வாகன கைத்தொழில் இராஜாங்க அமைச்சின் கீழ் தொழிற்படுகின்ற நிறுவனமாக காணப்படுகின்ற அதேவேளை, ஒவ்வொரு வழிச்செலுத்துகைக்குப் பின்னாலும் ஆரோக்கியமான சாரதி ஒருவரை அமர்த்துதல் எமது நோக்கமாகும். போக்குவரத்து மருத்துவ துறையின் முன்னோடி என்ற வகையில் எமது நிறுவனம் மேற்குறிப்பிட்ட நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு தொழில் வல்லுநர்களின் பங்களிப்பு தேவையாக இருக்கின்றபடியினால் பின்வரும் வெற்றிடமாகியுள்ள பதவிகளுக்காக நிரந்தர அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கு இலங்கை பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **<u>பணிப்பாளர் சபையின் செயலாளர் /சட்ட அலுவலர் MM 1-1 வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01</u>**

**தகைமைகள்**

**<u>வெளிவாரி விண்ணப்பதாரர்கள்</u>**

1. பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டப் பட்டத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   அத்துடன்

2. ஒரு வழக்கறிஞராக இருத்தல் மற்றும் வழக்கறிஞராக சத்தியப் பிரமாணம் செய்ததன் பின்னர்’ 01 வருட அனுபவத்தைப் பெற்றிருத்தல்.

**<u>உள்வாரியான விண்ணப்பதாரர்கள்</u>**

1. மேலே குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.

- வயதெல்லை: 22 வயதிற்கு குறையாதவராக இருக்க வேண்டிய அதேவேளையில் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். உள்வாரியான விண்ணப்பதாரர்களுக்கான உயர்ந்தபட்ச வயது எல்லை ஏற்புடையதாகாது.

- <u>சேவை வகுதிக்குரிய சம்பள குறியீட்டு இலக்கம் மற்றும் மாதாந்த சம்பள அளவுத்திட்டம்</u>

| | |
|---|---|
| **சம்பள அளவுத்திட்டம்**<br><br>முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை 02/2016 இன் II ஆவது உப அட்டவணையின்படி சம்பளக் கொடுப்பனவு மற்றும் பதவிக்கு உரித்தான ஏனைய கொடுப்பனவுகளும் உரித்தாகும். | MM 1-1<br>ரூபா 53,175-10x1,375-15x1,910-95,575 |

**<u>மேற்குறிப்பிட்ட பதவிக்குத் தேவையான பொதுவான தகைமைகள்</u>**

சகல விண்ணப்பதாரர்களும்

i. இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
ii. பதவிக்காக ஒப்படைக்கின்ற பணிகளை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கும் அதே போன்று நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்குத் தேவையான உடல் மற்றும் உளத் தகுதியினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
iii. சிறந்த நடத்தையைக் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

தகைமையுள்ளவர்களைத் தெரிவுசெய்வது சம்பந்தமான இறுதித் தீர்மானம் தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகத்தைச் சார்ந்ததாகும்.

சகல சுய விபரத் தகவல்களையும் உள்ளடக்கியதாக விண்ணப்பங்களைத் தயாரித்து தொடர்புடைய சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் உறவினரல்லாத இருவரின் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் ஆகியவற்றை உள்ளடக்கி, விண்ணப்பிக்கும் பதவியினை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிட்டு கீழ் காணப்படும் முகவரிக்கு **2021.12.14 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் மூலம் அனுப்பவும் அல்லது நேரிலும் ஒப்படைக்க முடியும்.**

தலைவர்
தேசிய போக்குவரத்து மருத்துவ நிறுவகம்
இல. 170, ஹைலெவல் வீதி,
நுகேகொடை.
2021.11.30
தொலைபேசி:- 011 2814849 011 2852868
தொலைநகல் :- 0112809305
மின்னஞ்சல் :- ntmi@sltnet.lk